**ஆகஸ்ட் – 11**

# TNPSC துளிகள்

- பிரபல பால் மற்றும் பால் பொருட்களுக்கான அமுல் பிராண்டின் விளம்பரதாரர்களான குஜராத் கூட்டுறவு பால் கூட்டமைப்பு நிறுவனத்திற்கு இந்திய சர்வதேச விளம்பர சங்கம் (International Advertising Association India – IAAI) 'வருடத்தின் விளம்பரதாரர்' விருதினை வழங்கியுள்ளது.
- ஜனவரி 29, 2020-ல் அன்று முடிவடையும் தனியுரிமை மற்றும் குடியுரிமைகள் மேற்பார்வை குழு உறுப்பினர் என்ற பதவியின் கால வரையரையான 6 வருட காலத்தின் மீதமுள்ள காலத்திற்கு புகழ்பெற்ற இந்திய அமெரிக்க சட்ட பேராசிரியர் மற்றும் சட்ட நிபுணர் ஆதித்யா பம்சாயை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார்.
    - இது ஒரு நாட்டில் தனியுரிமை மற்றும் குடியுரிமைகள் ஆகியவற்றை காப்பதற்காக சுதந்திரமாக செயல்படும் நிறுவனம் ஆகும்.
- நாட்டில் தொழில் முனைவோரின் புனிதத்தினை மேம்படுத்துவதற்கான அரசின் திட்டத்தினை நிறைவு செய்வதற்காக ஸ்டார்ட்-அப் இந்தியா நிறுவனம், ஸ்டார்ட் அப் அகேடமியா கூட்டணி என்ற திட்டத்தினை தொடங்கியுள்ளது. இது ஒரே மாதிரியான களங்களில் பணிபுரியும் கல்வி அறிஞர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே வழிகாட்டுதலுக்கான வாய்ப்புகளை வளர்ப்பதற்கான தனிப்பட்ட திட்டமாகும்.
- 51-வது ASEAN வெளிநாட்டு அமைச்சர்கள் சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெற்றது. இது சிங்கப்பூரின் வெளிநாட்டு அமைச்சர் லீ ஹிசெய்ன் லூங்க்-ஆல் தலைமை தாங்கப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவின் அமித்தி ஒப்பந்தம் மற்றும் கூட்டுறவில் ஈரான் அதிகாரப்பூர்வமாக இணைந்தது.
- தேசிய மனித உரிமை ஆணையத்தின் குறும்பட விருது திட்டம் 2018-ன் கீழ் சிம்லாவைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் தேவ்கன்யா லோத்தெத்தாவின் திரைப்படம் "Behind The Bars" முதல் பரிசினை வென்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம்

- நிதி ஆயோக் அமைப்பும் இந்திய தொழிற்துறை கூட்டமைப்பும் (Confederation of Indian Industry - CII) நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. மேலும் இரண்டு அமைப்புகளும் 3 ஆண்டு கால கூட்டு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் புதுதில்லியில் நடைபெற்ற அரசு மற்றும் வணிக பங்குதாரர் மாநாடு நடைபெற்ற சமயத்தில் கையெழுத்திடப்பட்டது.
- இம்மாநாடு நிதி ஆயோக், இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- இம்மாநாட்டின் ஒரு பகுதியாக, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை உலகம் அடைவதற்கான இந்தியாவின் தீர்வுகள் என்ற அறிக்கையை இந்திய தொழிற்துறை

கூட்டமைப்பு வெளியிட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர்

- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ், சிலியின் இரண்டு முறை அதிபராக இருந்த மிச்செல்லே பச்செல்லட்டை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் என்ற பதவிக்கு தேர்ந்தெடுத்துள்ளார்.
- இவர் ஜோர்டான் தூதரான ஜெய்த் ராஅத் அல் ஹுசைன் என்பவருக்குப் பதில் பதவி ஏற்பார்.
- சிலியின் உயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவராவார்.
- அவரின் முதல் பதவிக் காலத்திற்குப் பிறகு உலகளவில் பாலின சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனமான ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பின் முதல் இயக்குநராக 2010-ல் பணியாற்றினார்.

## மைத்ரீ – 2018

- இந்திய இராணுவம் மற்றும் தாய்லாந்து அரச இராணுவம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி மைத்ரீ – 2018, ஆகஸ்ட் 6-லிருந்து ஆகஸ்ட் 19 வரை தாய்லாந்தில் நடத்தப்படுகிறது.
- பயங்கரவாதத்தினை எதிர்கொள்ளும் நோக்கில் இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையேயான பரஸ்பர புரிதல் மற்றும் நல்லியல்பினை மேம்படுத்துவதில் இது மிகவும் முக்கிய பங்காற்றியுள்ளது.
- மைத்ரீ – 2018, காலாட்படை பிரிவுகள் அடங்கிய படைப்பிரிவு நிலை பயிற்சியாகும்.

## பசிபிக் பெருமுயற்சி – 2018

- பன்னாட்டு தொலைத் தொடர்புக்காக இணைந்து செயலாற்றும் திட்டத்தின் (Multinational Communications Interoperability Program – MCIP) கீழ் தொலைத் தொடர்புப் பயிற்சியான "பசிபிக் பெருமுயற்சி – 2018" (Pacific Endeavor - 2018 – PE-18) நேபாளத்தின் காத்மண்டுவில் ஆகஸ்ட் 6, 2018 அன்று தொடங்கியது.
- இந்த 12 நாள் பயிற்சியின் முக்கிய குறிக்கோள் : ஆசிய பசிபிக் பகுதிகளில் பேரழிவு நேரங்களில் விழிப்புணர்வுடன் ஒருங்கிணைந்து செயல்பட இராணுவப் படைகளுக்கு பொதுவான தொலைத் தொடர்பு இயங்கு முறைகளை செயல்படுத்துவதே ஆகும்.
- இப்பயிற்சி நேபாள இராணுவம் மற்றும் அமெரிக்காவின் பசிபிக் தலைமை (United States Pacific Command – USPC) ஆகியவற்றின் இணைந்த முயற்சியாகும்.
- பசிபிக் பெருமுயற்சி 2005-ல் தொடங்கியது. மேலும், இது உடனடி மற்றும் பயனுள்ள விதத்தில் தொலைத் தொடர்புகளுக்கிடையேயான அமைப்பு முறைகளை பேரழிவு நிவாரண நடவடிக்கைகளின் போது இணைந்து செயலாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## தேசிய பண வழங்கீடு சங்கத்தின் சான்றிதழ்

- qSPARC V2 தளத்தில் Rupay நுண்சில் தொடர்பு மற்றும் தொடர்பற்ற அட்டைகளை தயாரித்தல் மற்றும் தனிப்பயனாக்கம் செய்தவற்கான சான்றிதழை பெற்ற முதல் நிறுவனம் IDEMIA என்ற பிரான்சு நிறுவனம் ஆகும்.
- இச்சான்றிதழ் எல்லா வித பணவழங்கீட்டு காட்சிகளையும் சோதனை செய்தபிறகு இந்திய தேசிய பணவழங்கீடு சங்கத்தினால் வழங்கப்படுகிறது.
- qSPARC என்பது ஒற்றை அட்டையிலேயே 20 வரையிலான பணவழங்கீடு பயன்பாடுகளுடன் கூடிய பல்வேறு பணவழங்கீடு பயன்பாடுகளை ஏற்றும் வசதி உடைய திறந்த இடைமுக வளைய பணவழங்கீட்டு முறையாகும்.

## அதிகப்படியான பங்காதாயம் - ரிசர்வ் வங்கி

- ஜூன் 2018 என்ற கால அளவோடு முடிந்த வருடத்தில் ரிசர்வ் வங்கி கூடுதல் பங்காதாயமாக 50,000 கோடி ரூபாய்களை அரசிடம் ஒப்படைத்துள்ளது.
- 2017ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட 30,659 கோடி ரூபாயை விட இது 63 சதவிகிதம் அதிகமாகும்.
- ரிசர்வ் வங்கியின் அதிகப்படியான பங்காதாயம் என்பது அரசு வரியற்ற வருமானம் என்ற தலைப்பில் பெறும் கணிசமான வருவாய் அளவாகும். இவை குறிப்பாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் பகிர்ந்தளிக்கப்படும் பங்காதாயங்களாகும்.
- இந்த கூடுதல் வருமானத்தோடு நிதிப் பற்றாக்குறை இலக்கை எதிர்கொள்ள இருக்கும் அரசின் வாய்ப்பு, நிதி ஒருங்கிணைப்பு மற்றும் பட்ஜெட் கணிப்புகளால் முன்னேற்றமடைந்திருக்கின்றது.
- இந்த வருட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 3.3 சதவிகிதமாக கணிக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## சீனாவின் முதல் அதிவேக விமானம்

- சீனா தனது முதல் அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட அதிவேக "அலை ஏறி" (Waverider) விமானம் ஷிங்காங் -2 (Starry sky – 2) என்ற விமானத்தை வெற்றிகரமாக சோனை செய்துள்ளது.
- "Waverider" வளிமண்டலத்தில் பறக்கக்கூடிய ஒரு விமானம் ஆகும். இது தனது அதிவேகத்தினால் காற்றுடன் உருவாக்கப்படும் அதிர்வலைகளை அதிக வேகத்தில் பறக்க பயன்படுத்தும் ஒரு விமானம் ஆகும்.
- சமீபத்தில், அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகியவை இதே போன்ற சோதனைகளை மேற்கொண்டுள்ளன.

- இந்த அதிவேக Waverider விமானம் சீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்துடன் இணைந்து சீன அரசினால் இயக்கப்படும் விண்வெளி காற்றியக்கவியல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும்.
- இது சாதாரண மற்றும் அணு ஆயுதங்கள் இரண்டையும் சுமக்கக் கூடியதாகும்.
- இதன் அதிவேகம் மற்றும் கணிக்க இயலா வீச்சினால் சமீபத்திய எந்தவொரு ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்புக்குள்ளேயும் ஊடுருவும் திறன் உடையதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## வெள்ளை மாளிகை பத்திரிகை நிருபர் சங்கம்

- வெள்ளை மாளிகை பத்திரிகை நிருபர் சங்கத்தின் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய –அமெரிக்கர் அனிதா குமார் ஆவார்.
- அதிபர் தொடர்பான செய்திகளை பற்றி சேகரிக்கும் பத்திரிக்கையாளர்களில் முதலிடத்திலுள்ள சங்கம் இந்த வெள்ளை மாளிகை பத்திரிகை நிருபர் சங்கம் ஆகும்.
- 2012-லிருந்து வெள்ளை மாளிகை தொடர்பான செய்திகளை இவர் சேகரித்து வருகிறார். மேலும் இவர் இக்குழுவிற்கு போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) 2018

- வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) 2018 அல்லது சிட்டி ஓபன் 2018 போட்டி இவ்வாண்டு ஜூலை 28 முதல் ஆகஸ்டு 5 வரை அமெரிக்காவில் ராக் க்ரீக் பார்க் டென்னிஸ் மையத்தில் நடைபெற்றது.
- வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) ஒரு வருடாந்திர கடின தரை டென்னிஸ் போட்டியாகும். இவ்வருடம் இப்போட்டியின் 50வது பதிப்பாகும்.
- ஜெர்மனியின் அலெக்சாண்டர் வெரேவ் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாவுர் என்பவரை வீழ்த்தி ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.



- ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா குரோசியாவின் டோனா வேதிக்கை

தோற்கடித்து பெண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.



- ஆண்கள் இரட்டையர் பிரிவில் ஜேமி முர்ரே (UK), புருனோ சோயர்ஸ் (பிரேசில்) இணை மைக் பிரயான் (அமெரிக்கா), எட்வர்ட் ரோஜர் வாசலின் (பிரான்ஸ்) இணையை வென்றது.
- பெண்கள் இரட்டையர் பிரிவில் ஹன் சின்யுன் (சீனா), டரிஜா ஜீராக் (குரோஷியா) இணை அலெக்ஸா குவரசி (சிலி), எரின் ரூட்லிபி (நியூசிலாந்து) இணையை வென்றது.

- - - - - - - - - - - - - - -